கோலாலம்பூர் தாவரவியல் மாநகரமாக உருமாற்றம் பெறுமா



பெட்டாலிங் ஜெயா, ஆக. 17-

கோலாலம்பூர் மாநகரத்தை உலகத்தின் முதலாவது தாவரவியல் மாகநகரமாக உருமாற்றம் செய்வது குறித்து நிபுணர்களும் தன்னார்வ குழுக்களின் பிரதிநிதிகளும் ஆராய்ந்து வருகிறார்கள். அக்டோபர் மாதம் இது குறித்து ஓர் உச்சகட்ட கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது. இக்கலந்துரையாடலில் மாநகர வாசிகளில் வாழ்க்கை தரத்தை பேணுவது முக்கியமான அம்சமாக விவாதிக்கப்படும். சுற்றுச்சூழலை கட்டிக் காப்பது அவசியமான அங்கமாக கருதப்படும்.

45 ஆவது ஆசியான் உச்ச நிலை மாநாட்டினை முன்னிட்டு மூன்று அம்சங்களை கொண்ட தாவரவியல் கலந்துரையாடல் நடைபெறும். மலேசிய சிந்தனையாளர் குழுவின் உலக அமைப்பு இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. இதன் தலைமை செயல்முறை அதிகாரி பல்வேறு அம்சங்கள் குறித்து தெளிவுப்படுத்துகிறார்.

நகரப்புற திட்டமானது ஒழுங்காக திட்டமிடாவிட்டால் அது சுற்றச் சூழல் ரீதியில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும். உஷ்ணத்தின் அளவு உயரும். பசுமை நிலங்களை துண்டாடுவது போன்றவை பல பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

இறுதியில் மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்திற்கு இடர்பாடு ஏற்படலாம். 2040 ஆம் தேதி கோலாலம்பூர் மாநகர் அமைப்பு திட்டத்தின் அம்சங்களை அடிப்படையாக கொண்டு தாவரவியல் மாநகர் கோட்பாடு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு வகையில் மாநகர் பகுதிகள் பசுமை மயமாக மாறலாம்.

ஒரு மரம் வெட்டி சாய்க்கப்பட்டால் உடனே 100 புதிய மரங்களை நடுமாறு பிரதமர் டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம் இதற்கு முன்பு கோலாலம்பூர் மாநகர மன்றத் திற்கு உத்தரவு பிறப்பித்திருந்தார். புயல் காரணமாக பல மரங்கள் வேரோடு சாய்ந்தது. இதனை தொடர்ந்து பிரதமர் மேற்கண்ட உத்தரவினை பிறப்பித்தார்.